[12th March 1964

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், இப்பொழுது ஆந்திரா மாகாணம் பிரிந்த பிறகு, இந்த ரெட்டி-கஞ்சம் வகுப்பினர் மாநிலத்திலுள்ள பிற்பட்ட வகுப்பினர் லிஸ்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: ரெட்டி-கஞ்சம் வகுப்பினர் லிஸ்டில் இல்லை. இந்த வகுப்பினர் ராமநாதபுரம் பகுதியில் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. டி. கார்சா கவுடர்: ஸார், ஆந்திரா மாகாணம் பிரிவதற்கு முன்னாலுள்ள பேக்வர்ட் வகுப்பினர் லிஸ்டில் இந்த வகுப்பினர் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஆந்திரா பிரிந்த காரணத்தினால்தான் இந்தத் தவறு ஏற்பட்டது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிற்பட்ட வகுப்பினர் இருக்கிறார்கள், சில பிற்பட்ட வகுப்பினருக்கு சர்ட்டிபிகேட்டு கொடுக்க முடியாது என்று ரெவின்யூ இலாகாவினர் சொல்லி விடுகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த எந்த பின்தங்கிய ஜாதியினர் இருக்கிறார்கள் என்பதற்கு சர்வே எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி எடுக்கப்பட்டிருந்தால் அந்த மாதிரியான லிஸ்டை அதிகாரிகளுக்கு அனுப்பி இன்னின்ன ஜாதிக்கு சர்டிபிகேட்டு கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அங்கத்தினர் அவர்கள் நீண்ட கேள்வி போட்டிருக்கிறார்கள். தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் சொல்லுகிறேன்.

அப்பளத் தயாரிப்பு நிலையங்கள்

*230 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கம் நடத்திய அப்பள உற்பத்தி நிலையங்களின் நிலை என்ன?

(இ) பொருளாதாரத் துறையில் இலாபமா நஷ்டமா?

(உ) தினமொன்றுக்கு சராசரியாக தயாரிக்கப்படும் அப்பளங்கள் எவ்வளவு?

(எ) அவைகளின் அடக்க விலை என்ன?

(ஐ) அங்கு வேலை செய்பவர்களின் யோக்கியதாம்சம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) to (*e*) As a measure of providing some means of employment to the women of the lower income group, Government sanctioned Centres for production of applams at Madras, Thirukalukundaram, Orathur, Athoor

12th March 1964]

and Cheranmahadevi. As the working of the Centres was found uneconomic, all the Centres were closed during 1957–58. Each centre engaged about 50 to 60 women from the lower income group to make applams out of the raw materials supplied by the Centre and the average production ranged from 2,000 to 2,500 packets of 100 a day per centre. Marketing became an acute problem and it was the main factor for their closure. There are no Government applam production units functioning at present.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், கும்பகோணத்திலே அப்பளம் உற்பத்தி செய்வதில் அதிகமான ஜனங்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே அப்பளம் தயார் செய்ய ஒரு அப்பளத் தொழிற் சாலையை ஏற்படுத்த அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்பளம் தயாரிப்பதில் கஷ்டம் இல்லை. விற்பனை செய்வதில்தான் கஷ்டம் இருக்கிறது. சாதாரணமாக அப்பளம் உற்பத்தி செய்கிறவர்கள், விற்பனை செய்யவும் முயற்சி எடுத்துக்கொண்டால், இந்த ஐந்து ஸெண்டர்களும்கூட வெற்றிகரமாக நடந்திருக்கும். ஆனால் அவர்கள் உற்பத்திதான் செய்வோம் என்று சென்று கொண்டிருந்ததால் விற்பனை செய்ய முடியவில்லை, ஆகவே இந்த ஸெண்டர்களை மூட வேண்டிய அவசியம் வந்தது.

இன்சுலேட்டர்கள் உற்பத்தித் தொழிற்சாலை

*231 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகே மின்சார இன்சுலேட்டர்கள் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்படும் உத்தேசமுண்டா ?

(இ) மேற்படி தொழிற்சாலைக்கு நெய்வேலியில் கிடைக்கும் களிமண் பயன்படுத்தப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) சென்னைக்கு அண்மையில் இன்சுலேட்டர் தயாரிக்கும் தொழிற்சாலையை பொதுத் துறையில் நிறுவ அரசாங்கத்துக்கு உத்தேசம் இல்லை. ஆனால் ஒரு தனியார் கம்பெனிக்கு இத்தகைய ஆலை நிறுவ அனுமதி தரப் பட்டுள்ளது.

(இ) இன்சுலேட்டர் தயாரிக்க இரண்டு மூன்று வகைக் களிமண்களின் கலவை தேவைப்படும். நெய்வேலிக் களிமண்ணும் கலவையில் சேர்க்கப்படும் என்று தெரிகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், இன்சுலேட்டர் செய்ய களிமண் தேவை என்றார்கள். 'ஒயிட் க்ளே' யினால் இன்சுலேட்டர் செய்ய முடியுமா என்று ஏதாவது ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இண்டஸ்ட்ரியல் அட்வைசர் என்று வைத்திருக்கிறோம். அவரைக் கேட்டால் சொல்லுவார்.